செ.வெ.எண்:389/2009(செமதொஅ) நாள். 11.11.2009

# காஞ்சிபுரம் பாபு திரையரங்கில் குழந்தைகள் திரைப்பட விழாவினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் சென்னை குழந்தைகள் திரைப்பட கழகத்தின் சார்பில் குழந்தைகள் திரைப்பட விழா பள்ளிக் குழந்தைகளுக்காக இலவசமாக 11.11.2009 முதல் 20.11.2009 வரை மாவட்டத்தில் உள்ள திரையரங்குகளில் காண்பிக்கப்படுகிறது. இன்று (11.11.2009) காஞ்சிபுரம் பாபு திரையரங்கில் நடைபெற்ற குழந்தைகள் திரைப்பட விழாவினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.எம்.அசோகன், பாபு திரையரங்கு உரிமையாளர் திரு.எ.பி.கந்தசாமி ஷா, முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் திரு.மணிகண்டன், பள்ளிக் கல்வித்துறை ஆய்வாளர் திரு.சுந்தரவதனம் ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள். சென்னை குழந்தைகள் திரைப்பட கழகத்தின் மூலம் பால்யமேதை, ஆயிஷா, ஆறுபேர் ஆட்டம், ஹயாத், அதிசிய கோட்டு, மல்லி-**1**, மல்லி-**2**, மயோக் மிர்ஜா ஆகிய 8 குறும்படங்கள் பள்ளி மாணவ-மாணவிகளுக்கு இலவசமாக திரையரங்குகளில் திரையிடப்படுகிறது. இவற்றை பள்ளி மாணவ-மாணவிகள் கண்டுகளிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.





செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்